E.S.I. Dispensaries in Madras City

* 507 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state the total number of E.S.I. dispensaries in Madras City as on this date?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சென்னை நகரிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் 1—11—1971-ல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் ஒரு சுற்றியங்கும் மருந்தகம் உட்பட 29 மருந்தகங்கள் இயங்கி வரு கின்றன.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, சராசரியாக எத்தனை தொழிலாளர்கள் இதன்மூலம் பயன் அடைகிறார்கள்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

உதவிப் பதிவாளர்களாகப் பதவி உயர்வு பெற்ற அலுவலர்கள்

* 508 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இவ்வாண்டு பத்திரப் பதிவுத் துறையில் உதவிப் பதிவாளர்களாகப் பதவி உயர்வு பெற்ற அலுவலர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இவ்வாண்டில் 30—10—1971 வரையில் 18 உதவியாளர்கள், இரண்டாம் தர உதவிப் பதிவாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

சிங்காநல்லூருக்கு உதவிப் பதிவாளர் அலுவலகம்

* 509 வினு—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூரில் உதவிப் பத்திரத் துறை அலுவலகம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஆம்.

Fishing Boats

*510 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that a large number of motor-launches are to be distributed to the fishermen this year on loan basis; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம். எனினும், தவணைக் கொள்முதல் அடிப்படையில் மீனவர்களுக்கு மீன்பிடி விசைப்படகுகள் வழங் கப்படுகின்றன.